௨

சிவமயம்.

# ஜர்மன் சில்வர்
# சரித்திரக்கீர்த்தனை.

இஃது

ம-ா-ா-ஸ்ரீ. மன்சுகோண்டா - திருவேங்கடத்தானையா
அவர்கள் குமாரரும்
சென்னை ஈவினிங்பஜாரில்
ஸ்பெஷல் ஜர்மன்சில்வர் மெர்ச்சண்டு
அண்டு நகை வியாபார ஷாப்புக் கதிபருமாகிய
ஸ்ரீமான்
**மம் - சடகோப ஐயா அவர்கள்**
விருப்பின்படி
சிதம்பரேசர் பதம்பணிதாசர்
புதுவை - மதுரகவி
**நடராஜ ஆசாரியாரவர்களால்**
இயற்றலுற்று.

---

சென்னை
மீனாக்ஷிவிலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.





---

1902

*Registred Copy-right.*

இதன்விலை ௨ ௮-3.

உ.

# விளம்பரம்.

இகஜென யாவரிந சகலநாடகத் தலைவர்க்கும் மற்றேனையோர்க்கும் தெரிவிப்பதியாதெனில், என்னிற்றறிவிற்கேற்ற வண்ணம் நூதனமாக யியற்றி ஸ்நேகசரித்திர நற்பாமாலை என்னும் ஜர்மன்மன்னர் சரித்திர கீர்த்தனை ரிஜிஸ்டர்செய்து ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறபடியால் இச்சரித்திர கீர்த்தனையை யாவரேனும் என் உத்தரவின்றி அச்சிட்டாலும் இதிலுள்ளகீர்த்தனை முதலியவை யெடுத்து இதர சரித்திரத்திற்சேர்த்து அச்சிட்டாலும் இதர பாஷைகளாகிய தெலுங்கு முதலான எழுத்திலச்சிட்டு வெளிவரக் கண்டாலும் இதனால் வரும் நஷ்டத்தைக் கண்டிப்பாய்க் கொடுப்பதன்றி கோர்ட்டின் மூலமாய்த் தண்டனைக்குள்ளாவார்கள்.

இங்ஙனம்
க்ஷணவிநோதன்,

புதுவை - நடராஜ - பூசாரி.

உ

சிவமயம்.

# ஜர்மன்சில்வர் சரித்திரக் கீர்த்தனையின் கதாசங்கிரகம்.

தவம் ஞானங் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஆன்றோர் அனைவர் கட்கும் வந்தனமுடன் அடியிற் கையொப்பமிட்ட யான் தெரிவிப்ப தியா தெனில்,

மகா தவத்திலுயர்ந்த நாரதமுனிவர் தமது நற்றவம் விடுத்து உலகத்துள்ள அற்புதங்களைக்காண பலதேசத்திற்குச் சென்று ஆங்காங்குள்ள அதிசயத்தைக் கண்டுங் களிப்படையாது எல்லாவற்றிலு முயர்ந்த புதுமை எங்ஙன மிருக்கிறதென் றறிவதற்குச் சென்னைமா நகரத்திற்கு வந்து அப் புவியையாளும் அரசனுக்குத் தன்பதியி னற்புதம் தெரிய வருமென் றெண்ணி அரசனிட மேகினர். வந்ததை அரசன் கண்டு சிந்தை மகிழ்வு கொண்டு வந்தனம் புரிந்து ஆசனமதையீந்து அமரச்செய்து தாங்கள் எனைநாடி வந்த காரியத்தைத் தெரிவித்திடுகவென நாரதர் மன்னு உன்னகரிலுள்ள அதிசயத்தைக் காண வந்தனன் என. அதற்கரசன் மகிழ்ந்து ஆ! ஆ! அந்த அற்புதத்தை என்னவென் றுரைப்பேன் அஃதியாதெனில், இச்சென்னையில் மம்.௱ சடகோப ஐயா என்னும் புனிதர் ஸ்பெஷல் ஜர்மன் சில்வரால் அனேக புதுமையாக மாதருக்கு நற்பணிகளும் மன்னர்களணிய முடிகளும் இன்னம் பலவித ஆபரணங்களுமமைத்து நூதனமாக ஓர் ஷாப்பொன்று கந்த சுவாமியார் தேருக் கருகில் வைத்திருக்கின்றார். இது எப்புவியும் புகழா யிருக்கிறதென் றரசன் மொழிந்தனன். அதனைக் கேட்ட நாரதர் அந்த அற்புதத்தைக் காண அரசன் சொன்ன விடத்தில் வந்து ஸ்பெஷல் ஜர்மன் சில்வர் நகை ஷாப்பினுள் நுழைந்து மனமகிழ்ந்து நிற்க ஏஜெண்டு நகையின் திருநாமஞ் சொல்லக்கேட்டு கண்ணுற் பார்த்து பிரமானந்த பரவசராய் நாம் மனைவியில்லாத் துறவி என்ன செய்வோம்? இந்த ஷாப்புக் கதிபதியைக் கண்ணுற்று செல்வது நலமென்று ஏஜெண்டின் முகாரவிந்தம் நோக்கி யிந்த ஷாப்புக்கதிபர் எங்ஙன மிருக்கின்றனவென்று இயம்ப, அவர் ஆபீசிலமர்கின்றனரென்று கூற, ஆபீசைக்காட்டென அப்படியேகாண்பிக்க நாரதர்சென்று நின்றனர். அதிபர் இவர் வருதலைநோக்கி இவர் மகா புனிதரென்று வுணர்ந்து நல்ல ஆசன மளித்து அமரச்செய்து வந்தன வழிபாடேன் அதிபர் நின்றதைக்கண்ட நாரதர் இவர் புகழையும் இவர் ஷாப்பி னகையின் பெருமையும்

எப்புவியிலும் ஸ்ரீராதாருக்மணி சமேதனாகிய கண்ணபிரானுக்கும் கலைவாணி சமேதனாகிய பிரமனுக்குந் தெரிவிக்க வேண்டுமென்று நினைந்து ஸ்ரீவைகுந்தஞ்சென்று ஸ்ரீகண்ணபிரானுக்கும் அருகே வசிக்கும் பிரமனுக்குந் தான் கண்ட வெண்பொன் நகையினழகையும் அந்த ஷாப்புக் கதிபர் புகழையும் தெரிவித்து தன்பதிக்குச் சென்றனர். பின்னர் ஸ்ரீராதா ருக்மணிகளிருவரும் தன்னாயகராகிய கண்ணபிரானிடம் நாமும் அந்த அற்புத நகையைக் கண்டு வருவோமென் றியம்ப அப்படியே செல்லலாமென் றுரைத்தனர். சரஸ்வதி தன்னாயகராகிய பிரமாவிடம் நாமும் சென்று அந்த அற்புதத்தைக் காணலாமென்றுரைக்க இருவரு மிசைந்து உலகத்துள்ள மனிதரைப்போல் மானிடவடிவம்பூண்டு அவரவர் வாகனமதி லாரோகணித்து நாரதர் சொன்ன விடத்திற்கு ஸ்ரீகண்ணபிரானிருமாதுங் கஞ்சனொருமாது சகிதராக சென்னை கந்தசாமி ஆலயத்தைக்கண்டு உள்ளே நுழைந்தனர் இவர் வருதலைத் தெரிந்த கந்தநாதர் விரைந்து எதிரே சென்று வந்தவர்களுக்கேற்ற ஆசனமளித்து அமரச்செய்து தன்மாதுலனையும் தன் மைத்துனனையும் சுகக்ஷேமத்தை வினவி இந்த வடிவம் பூண்டு யின்றுவந்த காரணம் யாதோ வென்றனர். அதற்கு வந்த கண்ணனுங் கஞ்சனுங் கனிந்து உன்பதியிலுள்ள ஜர்மன் சில்வர் நகையைக்காண வந்தனம். நீரும் எமதுடன் வருக வென்றிட அம்மொழிக்கிசைந்து கந்தநாதர் தெய்வானை வள்ளி சகிதராக மானிடவடிவம் பூண்டு தமது வாகனமாகிய மயிலின்மீது ஆரோகணித்து மூவரும் ஐந்து மாதரும் அந்த ஷாப்பினருகே வாகனங்களை விட்டிறங்கி ஷாப்பில் அவரவர் மனைவியுடன்சென்றனர் இவர்கள் வருதலோர்ந்த ஏஜெண்டு யிவர்கள் மகா புனிதர்களென்று தக்க ஆசனமளித்து தங்களுக்கு எந்தநகை வேண்டுமென இங்குள்ள நகையின் திருநாமத்தைச் சொல்லென்று இயம்பினர். ஏஜெண்டு அந்தநகையின் பெயரையும் அதின்புகழையும் அதின்விலையையுஞ் சொல்லக் கேட்டுத் தந்தம் மனைவியருக்கு எந்தநகை வேண்டுமென்று கேட்க வந்த மாதர்கள் எல்லோரும் எல்லாநகையும்வேண்டியதென்றனர். திருமூர்த்திகளாகிய நாதாக்கள்பெண்காள் எங்கள் கையிலிந்த நகைகளெல்லாம் வாங்குவதற்குயேற்றபொருள் இல்லாமையால் என்செய்வோமென ஆனால் நாங்கள் எல்லோரும் இந்த ஷாப்பிலுள்ள வெண்பொன் நகைகளைப்பார்த் திங்கனே வசிக்கிறோம் என்று புகல அதற்கு மூவரும் தம் சிந்தையுவந்து இந்த ஷாப்புக் கதிபதியின்குணத்தைக்கண்டு நமக்குவேண்டிய நகையைவிண்டு கையில் கொண்டுவந்த பொருளைத்தந்து மிகுதியைத்தருகிறோமென்று வாங்கிக் கொள்ளலாமென நினைந்து அவரவர் மனைவியர்களை யிந்த ஷாப்பினிலே யிருங்களென கட்டளையிட்டு ஏஜெண்டு ஆபீசைக்காண்பிக்க மூவரும் ஆபீசில் வந்து நின்றனர். அங்குவசிக்கும் அதிபர் விரைந்தெழுந்து வந்தமூவர்களையும் புகழ்ந்து மிகவுமகிழ்ந்து யிவர்கள் மகாபுண்யரென் றுணர்ந்து தக்க ஆசனமளித்து அவரவருக்கு வந்தனவழிபாடு முதலான திருப்பணிகளைச்செய்து தங்களுக்கு எந்த நகைவேண்டியது அதனை வியம்புவீராகில் நான் நல்ல நகைகளைத் தருகிறேன் என்றுகூற நாங்கள் உனதுபுகழையும் உனதுஷாப்பின் நகையினழகையும் கண்

நாட்டில் கேள்வியுற்று எமது மனைவியர்களுட னுமது ஷாப்பினில் வந்தனம் நகைவாங்க கொண்டுவந்தபொருள் சிலகுறைவாக யிருப்பதால் தங்கள் மனம கிழ்ந்து எங்கள்மனைவியர்க்கேற்ற நகைகளை கொடுக்கவேண்டுமென அப்படியே தருகிறேன். நான்கேட்கும் வரத்தைத் தரவேண்டுமென்று அதிபர் கூற அவ் வண்ணமே வந்த மூவர்கள் தருகிறோமென்றுரைக்க அப்போதே அதிபர் மூவ ர்களுடன் ஷாப்பினில்வந்து அங்கு ஐந்துமாதர் இருத்தலறிந்து அவர்களைப்ப ணிந்து எந்த நகை வேண்டுமென எங்களுக்கு சுருள் கொலுசு முதலான நகை தருகவென அப்படியே அதிபர் கொடுத்து நான்கேட்கும வரத்தை நல்க வேண்டுமென அஃதியாதெனில் நீங்கள் எல்லோரும் மனைவியருடன் எனது ஷாப்பில் வசிக்கவேண்டும் உமக்கு வேண்டிய திருப்பணிகளை நான்செய்கிறே னென்றிட, அன்பா நடுநாட்டில் வாழுமெமக்கு இக்கொடுநாடு ஆகாதா கையால் இன்னம் வேண்டியவரம் யாதோ அதனை யியம்பென அஷ்டஐஸ் வரியங்களும் நான் நினைத்தபோதுவந்து அருள்செய்ய அநுக்கிரகிக்க வேண்டு மென் றதிபர் புகல அப்படியே அஷ்டலக்ஷ்மியும் வரவழைத்து மம். சட கோப ஐயாஷாப்பினில் பதினாறு செல்வசம்பத்துடன் வாழும்படிகட்டளை யிட்டு ஓநர். மம். சடகோப ஐயாவிற்கும் ஷாப்பி லுள்ளவர்களுக்கும் ஆசீர் வதித்து ஏஜெண்டு நம்பெருமாளையாவிற்குத் திருமணம் சீக்கிரத்துண்டாக அநுக்கிரகித்து அவரவர் மனைவியருடன் அவரவர் வாகனமதி லாரோகணித்து தந்தம் பதிக்குச்சென்று வாழ்ந்தனர். சுபம். சுபம். சுபம்.

இக்கதை நூதனமாக யியற்றி என் சிற்றறிவிற்கேற்ற வண்ணம் இடை யிடையே கீர்த்தனம், ஜாவளி, சிந்து, டோரா, வெண்பா, விருத்தம், இன்னம் பலவித பாடலாகவமைத்து அச்சிட்டிருக் கின்றனன் ஆதலால் இதைக் கண் ணுறும் கண்ணியர்கள் கற்டனைக் கதையென்று கருதாது முற்றிலுங் கண்டு களிப்புடைய தங்கள் மேலானகுணத்தை வேண்டுகிறேன்.

இங்ஙனம்

# சிறப்புக்கவி.

விழுப்புரந் தாலுக்கா வெங்கந்தூரில் வசிக்கும்
பிரம்மஸ்ரீ. கணபதிசாஸ்திரியா ரவர்களால்
இயற்றிய

விருத்தம்.

மதிநிகர் ஜர்மன்சில்வர் மாசிலா நகைபுரிந்தெப்
பதிபுகழ் வாணிபஞ்செய் பண்புறுஞ் சடகோபையா
நிதிபெற ஷாப்பின்சீரை நிகரிலாக் கவியிற்செய்தான்
புதியதாய்ப் புலவரேற்கப் புகழ்நட ராஜன்மாதோ.

வெண்பா.

புவிராஜர்க் கன்பன் புனிதநட ராஜக்
கவிராஜன் செய்த கவிகண் — டுவகையினைக்
கொள்ளாதார் யாவர் குவலயத்தி வன்கவியை
விள்ளாதார் யாவர் வியந்து.

---

திருமயிலை வித்வான்
சண்முகம்பிள்ளையவர்கள் மாணுக்கரும்
இந்நூல்பார்வையிட்டவருமாகிய
திருமயிலை-இராமலிங் கமுதலியா ரவர் களா லியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நற்புதுவைமேவு குமரப்ப நரேந்திரன்சேயை நாடித்தாஞ்செய்
கற்பகநாட்டினர் வியக்கமுயர் ஜர்மன்சில்வர்தன்மை காதையாகச்
சொற்புலவருளங் களிக்கப்பொருடரு மஞ்சடகோபச் சுகுணன்சொல்லா
முற்பவகீத் துயரியசைவந்தழீ இத்தமிழ்க்கடலை முகந்தமேலோன்.

விடகாகந் திகழ்தருமெய் நடராஜனடியிணையை விழைவினுளுந்
திடனுகமனதி னினைந்துருகியுடன் மயிர்பொடிக்குஞ் செல்வந்தனை
கடனுகவுடைய விஸ்வகுலநடராஜக் கவிஞன்கழறினுனின்
புடனுகவரசக் கீர்த்தனப்பாவால் ஜர்மன்வெள்ளி புதுமைமாதோ.

శ్రీరస్తు.

# అంగీకృతులు.

సీ॥ శ్రీమించి భ్రమియించు నామంచుకొండస
ద్వంశాబ్ధిపూర్ణ సుధాంశుడెవఁడు।
శ్రీచెన్నపురిగుజ్జి జెర్మనుసిల్వారు
షాపుస్థాపించిన చతురుడెవఁడు।
నిత్యంబుహరిపాద నీరేరుహంబుల
భక్తిస్మరించు సద్భక్తుడెవఁడు।
మాతృపితృలయాజ్ఞ మఱిమీఱకే ప్రొద్దు
వినయుఁడైసల్పు వివేకుడెవడు।
తే-గీ॥ అట్టిసుగుణాఢ్యుశఠగోప యార్యసదయు।
నిత్యవైభవాఖండలు సత్యనిరతు।
సాధుచరితురూపవసంతు శౌరి బ్రోచు।
చుండుగాక యీభూలోక ముండుదాక॥ ౧॥

క॥ గంధపుగిన్నెలు తట్టలు।
నందపుబొమ్మలునుచొంబు లాభరణంబుల్।
పొందదగు వారిషాపున।
నందిందుం బోవనేల నయ్యావినరయా॥ ౨॥

క॥ అదిఁయున్నది యిదిలేదను।
కొడవలులేకుండయుండుఁ గుదిరెన్నరకుల్।
మదిఁదలప వెలలు సరసము।
లిదివినరయ ఘనులుమీఱ లిప్పుడుప్రీతిన్॥ ౩॥

క॥ వెండివలెనె కడురంజిలు।
వెండియుఁ జెడదయ్యవెండి వెఘ్యోండ్లనుభూ।
మండలమీ యంగడితో।
నెండొకయంగడినిబోల్ప నెప్పనెతలపన్॥ ౪॥

క॥ ఈతనిపాపు ప్రసిద్ధము।
భూతలమందంచునరులు బొగడుటయరుదే।
శ్రీతరుణీమణి యిమ్యోఁడ।
జేతోమోదంబుతోడ స్థిరముగనుండన్॥ ౫॥

ఉత్సాహ॥ పౌరమూరకాడ నేల నరయనితడుపాపువి।
స్తారధనము వ్రయముసేసి ధరణిగుజిలి నిల్వఁగా।
భూరి మోద మొసగువస్తువులనునిందుజూడఁగా
నేరికైననగునెదీని నింతయేని నెన్నఁగా॥ ౬॥

క॥ శఠగోపయ పాపునకై।
నటరాజాచారసుకవి నయముగజగతిన్।
బటుగతిని నరవమందున।
ఘటియించెఁ బ్రబంధమొకటి ఘనులౌననగన్॥ ౭॥

క॥ ఘనహిమవద్గిరిపాదవున।
కెనయగుఁగనకంబుఁదెచ్చి యిచ్చిననటరా।
జునకుంజాలునె తత్కృతి।
మనోహారముగాదె ధాత్రిమనుజులకెల్లన్॥ ౮॥

క॥ పౌరనటరాజసత్కవి।
నూరకపొగడంగనేల నుర్వ్యరయందే।
వారుంబోలరుకవితా।
సారమునందితనితోడఁ జాలందలపన్॥ ౯॥

క॥ ధనిసెట్టి వంశజుండను।
ఘనకవులకుఁగింకరుడను కరివరదుసదా।
వినుతించువాఁడ బాలుడ।
జనువాఁడంజగతిఁ బార్థసారథియనగన్॥ ౧౦॥

సంపూర్ణము.

## வித்துவான். தி. தி. அப்பாவுபிள்ளை யவர்களின்

அருள்மாணுக்கர்.

## ம-ா-ா-ஸ்ரீ. பி. சி. எஸ். பாலசுந்தரமுதலியார்

அவர்களாலியற்றிய

வெண்பா.

மதுவைநுகர் பூஞ்சோலை மன்னி வளர்ந்தோங்கும்
புதுவைநகர் விஸ்வகுலப் பூபன்—மதுரகவி
பன்னு நடராஜப் பாவலவன் மம்சடகோ
பன்னுடைய மாபுகழைப் பார்த்து.

சொன்னயமும் பண்ணயமுஞ் சுந்தரபாக் கள்நயமும்
பன்னயமுந் தான்பொருந்தப் பாடினுன்—அன்னவன்றன்
சீரோங்கு ஷாப்பிற் றிகழும்வெண் பொன்னகைகள்
பாரோங்கும் வண்ணம் பரிந்து.

உ

# கடவுள் தோத்திரம்.

## விநாயகர் துதி.

குறள்வெண்பா.

அத்திரு மும்புவியி லாசிலிக் கதையோத
அத்திமுக நாதா வருள்.

## கந்தநாதர் துதி.

கலி விருத்தம்.

இந்த ஜர்மன்சில்வரி னெழிற் கதை
அந்த மேவியகீர்த்தனை யாற் சொல
எந்த சாமிக்கிணையிலை யாஞ் சென்னோக்
கந்த சாமியின்றன்கழ லேற்று வாம்.

## பரமசிவஸ்த் துதி.

விருத்தம்.

அருவுரு வில்லாஞான அமலசங்கரனேமிக்க
திருவுரு மார்பனுந் தேடரும் பதனேபாரின்
மருவுறுஞ் ஜர்மன்சில்வர் மாகதைப் பண்ணிலோத
இருவருள் புரியவுன்றன் சேவடிப் பணிகுவேமால்.

## கண்ணபிரான் துதி.

### அறுசீர்விருத்தம்.

விண்ணுடர் சொலவரிய ஜர்மன் சில்வரின்புகழை விருப்பமாகப்
பண்ணார்ந்த கீர்த்தனமென்பாவத்னிற் புகலவருள் பளகிலாது
தண்ணார் மொழிசுகுமாராதாருக்மணிக் கினியதலைவனே சீர்க்
கண்ணாநின்றன் கருணைவைத்தெனையாண்டலுன் கடனுமரோ.

## பிரமன் துதி.

### சந்தவிருத்தம்.

அன்னவா கனத்தின் மீதிலார்ந்த நான்முகா வின்று
என்னவா வினுக்கிசைந்து யிலகு ஜர்மன் சில்வரின்
தன்மை காதையாக வித்தலத்தினி லுரைத்திட
புன்மைநீக்கிப் போதருள் புரிந்திடத் துதிப்பனே.

## சரஸ்வதி துதி.

### முடுகுவிருத்தம்.

சீருலாவிய வேதகாவினிற் றிகழுநற் கலைவாணியே
ஏருலாவிய ஜர்மன்சில்வரி லியற்றிடுங்கதை யின்புகழ்
பாருலாவிய கீர்த்தநந்தனிற் பாடவேயருள் செய்குவாய்
தாருலாவிய நின்பதத்தினை சந்ததமு வந்திப்பனே.

## குருவ்ஸ் துதி.

### கலிவிருத்தம்.

பன்னருங் கலைப் பண்புடனே யுரைத்
தின்னலா நெறியே கிடவே யரு
டன்னை யெற்கரு டந்தையெனுஞ் சீமான்
சென்ன கேசவன் சீர்பதம் போற்றுவாம்.

## அவையடக்கம்.

### விருத்தம்.

சுந்தரஞ்சேர் சடகோப ஐயாவிற்குந்
தூயஜெர்மன் சில்வர்நகைகளி னேற்றத்தை
சிந்தைமகிழ்ந் தடியன் கீர்த்தனை ரூபத்திற்
செய்தன னோர்காதையதாச் செம்மைமேவும்
பைந்தமிழ்மாக் கடல்மடுத்த பாவலோர்கள்
பாச்சியெனும் பாலர்சொலைப் பரிவாய்க்கேட்டு
தந்தைதா யுவப்பதுபோ லென்றன்பாக்கள்
சாரமிலதேனு மகிழ்தனைக் கொள்வீரே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமான் மம். சடகோப ஐயா அவர்கள்
ஜர்மன்சில்வர் நகை வியாபார

# நவரசசரித்திர நற்பாமாலை
என்னும்
# ஜர்மன்சில்வர் சரித்திரக் கீர்த்தநம்.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

மெய்யார்ந்த சென்னைதனின் மேவுஞ் சடகோப
ஐயாவின் கீர்த்தி யவர்ஷாப்பின்—துய்யபுகழ்ப்
பாமாலை யாகப் பரிவுடனே பாடவாந்
தாமாலை மாமுகவத் தா.

## அற்புதசரித்திர அலங்காரம்.

நாரதர்வசிக்கும் மலைச்சிறப்பு.

இ - ம். புன்னாகவராளி தாளம் - சாப்பு.

சிந்து.

(பழனமருங்கணையும்) என்பது போல்.

சீரார்புலிகளத்தரம் படர்
செம்மையுறுமுகில் கண்டக்கணம் (1)

காரார்கரியெனவே வுன்னி
கையதிற்றாவிக் கலங்கிவிழும் (2)

நாகங்குடியிருக்கும் பல
நரிகளெங்குந்திரிந் தேயுலவும் (3)

சிங்கமெங்குமுறையும் மிக
சிறுத்தைகள்கூச்சலிட்டே யலறும் (4)

மந்திக்குழாமிலகும் நீண்ட
மனிதனைப்போல நடந்துவரும் (5)

மயில்கள்விளையாடும் எந்த
மாமரமீதுங்குயில் பாடும் (6)

இன்னும்பலமிருகங் களும்
எங்கும்நிறைந்திருக்கு மலையில் (7)

குகையில்மகாதவத்தைச் செய்து
கொண்டிலகும்நாரத முனிவர் (8)

வசிப்பாரந்தமலையில் மன
வஞ்சமிலாமலேயின்பமுடன், நாரதமாமுனிவர் (9)

---

## மூடுது விருத்தம்.

பாரதினுளவற்புதமிக காணப் பரிவாக
நாரதமாமுனிதந்தவம்விட்டெழில்நகராம் நீள்
தூரமதிற் சென்றதிசயங்காணு துயர்நீங்க
சீரமர்சென்னைப்பதியினில்வந்தார் திறமுற்றார்.

இ ம். சங்கராபரணம் - அடதாளம்.
சவாயி.
(தையலாரகும்) என்பதுபோல்,

---

சென்னையினுள்ளவதிசயந்தன்னைத்
தெரிந்திடவேமனதில்நினைந்து
அன்னகராளுமிராஜனிடத்திற்கு
ஆவலுட னங்கு மேவினரே. (1)

மன்னனைக்கண்டுமகிழ்ந்துபுகழ்ந்திட
மாசிலாநாரதர்தாள்பணிந்து
பன்னருமாசனந்தன்னைக்கொடுத்திவண்
பார்புகழ வமர் வீரென்றான். (2)

என்றுராஜனெழுந்துவிளைந்துநீர்
யென்றனிடம்வந்ததேதென்றான்
உன்றனகரிலுள்ளவதிசயத்தை
யோதுகென்றார் மாவய மூன்றும் வென்றார். (3)

## இராஜன் சொல்லும் பாடல்.

(மதியோவதனமிவள்) என்பதுபோல்.

இ-ம். இந்துஸ்தான்-ஆதிதாளம்.

பல்லவி.

நாரதமுனிவகேண்மோ நான்சொல்வதை
நலமிகுஞ்சென்னைதனிலுளவதிசயத்தனை நவமுடனே (நா)

சரணம்.

இதுகாறுங் கண்டறியேனே என்னசொல்வேனே
யின்பமாய்த்தானே
இதுவோவெகுபுதுமையாகக் காணுதுவே
யித்தராமீது உத்தமசீர் (நா)

## நாரதர் சொல்லும் பாடல்.

இ-ம். தேசிகதோடி-ஏக தாளம்.

கண்ணிகள்.

சொல்லும்போதென்மனமுஞ் சோருதுசுந்தர மன்னு
தொல்லுலகில்யான்தெரிந்திடவேயதை சொல்லுவீர் கண்யா.
இன்னஞ்சாலம்செய்வதுனக் கேற்குமோ புண்யா
அன்னதைத்தெரியவுன்னிடம் வந்தேனறைகுவீர் திண்யா.

## இராஜன் சொல்லும் பாடல்.

(ஆ ஆ இந்தஜனனம்வந்து) என்பதுபோல்.

இ-ம். இந்துஸ்தான் கமாசு-தா-ம். ரூபகம்.

பல்லவி.

ஆ ஆ அந்தவற்புதத்தை யறையலாகுமோ சுவாமி. (ஆ)

அநுபல்லவி.

யோகாவென்றனகர் தனிலே
யுயர்வுபலவுள தாலே
யோங்குகிறேன் கேளே. (ஆ)

சரணங்கள்,

சென்னைகந்தசாமிகோயில் தேரடிபாலில்
பன்னருஞ்சந்திரனொளியைப் போலே
பண்புறுஞ்ஜர்மன்சில்வ ராலே
பணிசெய்கின்றனரிக் காலே. (ஆ)

வெள்ளியில்பலநகைபுரிவது வியப்போபார்மீது
வொள்ளியசெம்பினை வெள்ளியாய்
உருகச்செய்து மிக அழகாய்
உஞற்றக்கண்டேனே நகையாய். (ஆ)

அந்தஜர்மன்சில்வர்ஷாப்புக் கதிபன்யாரெனில்
சந்திரமுகசுந்திர மெய்யோன்
சடகோபஜயாவென்னும் பேரோன்
சகலராக்காப் போன். (ஆ)

சந்த விருத்தம்.

இந்தவற்புதத்தைப் புவியாண்டிடும்
யிறையவன்மொழிய வம்மொழியினை
அந்தமேவியநாரதர் கேட்ட்வ்
வற்புதத்தையறிந்திட வெண்ணியே
கந்தமேவியசோலைதிகழ் சென்னை
கந்தசாமியினாலயந் தேரடி
வந்துஜர்மன்சில்வர்நகை ஷாப்பினை
மகிழ்ந்துநோக்கிப்புகழ்ந்தனர் மாசிலோர்

வசனம்.

நாரதமாமுனிவர் ஜெர்மன்ஸில்வர் நகையைக்கண்டு ஆனந்தங் கொண்டுபுகழ்தல்.

(ஞாயந்தானோநீர்சொல்லும்) என்பதுபோல்.

இ-ம். பியாகு - ஆதிதாளம்.

பல்லவி.

இந்நகையைப் போலே யானும்
எங்குங்காண விலையே புவிமேலே

அநுபல்லவி.

சந்திரபிறமதைத்தாவும் வெளி
தன்னையெங்குமே வீசும்
அந்தவெள்ளை செம் பாலே
அமைத்தது அற்புதமிக் காலே. (இ)

வெள்ளியேயிது வென்றிடலாம் மிக
வெள்ளைசெம்பேமுன் பெனலாம்
உள்ளத்திலறியாவெவ ரெனலாம்
வுற்றுப்பார்த்தப்புற மேகலாம் (இ)

வைகுந்தவாசனிடஞ்சென்று அவர்
மங்கையிருவருக்கும் புகன்று
தருமிந்தநகையணிய வென்று
சாயுங்காலம்வாரோமென்றே நின்று (இ)

வசனம்.

நாரதமகாமுனிவர் இந்த ஜர்மன்சில்வர் ஷாப்புக்கு அதிபதி யெவரென்று ஏஜெண்டு நமபெருமாளையாவை வினவுதல்.

(ஆறு நீயுன்பேரதென்ன) என்பதுபோல்.

இ-ம். இந்துஸ்தான் தா-ம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்தஜெர்மன்சில்வர்ஷாப்புக்கிறைவன்நாமம் யாதையா
இந்துவதன நம்பெருமாள் ஏஜெண்டேமொழிவீர் மெய்யா
புண்ணியமம் சடகோபஜயா புகலரும் பெயர் தானையா
கண்ணியரேயவரெங்ககன்றூர் கனிவுடனுரைப்பீர் துய்யா
ஆசில்ஜெர்மன்சில்வர்ஷாப்புக்காபீஸ்வொன்றுள தையா
நேசமுடனங்கிருப்பார்திகழ்த்துகிறேன் புகழ் செய்யா
என்றுசொல்லவேஜெண்டுமிகயின்பங்கொண்டு நாரதரும்
சென்றுவந்து ஆபீஸ்தன்னை தெரியக்காட்டு மென்று ரவரும்
ஏஜெண்டுவந்தாபீஸ்தன்னை வெழிலுடன் காட்டவே கண்டார்
தேசமெங்கும்புகழ்நாரதர் செப்பருமானந்தங் கொண்டார்

பொது விருத்தம்.

செப்பரிய நாரதனை யழைத்துவந்து
சீராரோஜெண்டாபீஸ்தனில் விடுக்க
யெப்புவியும்புகழ்தருமம்சடகோபையா
வெழில்முனிவர்முகப்பார்த்திட்டின்பமேவி
தப்பிதமில் நல்லவாசனமளித்துத்
தக்கபடி பணிகடனைச்செய்ய நோக்கி
அப்பொழுதேயிவர் புகழைச் செப்பவெண்ணி
அகமகிழ்ந்தா ரம்புவியில் புகழ்ந்தாரன்றே.

வசனம்.

ஜர்மன்சில்வர் ஷாப்புக்கதிபர் வந்தனமுடன் நாரதனைக் கேட்கும் பாடல்.

(ஊர்வசியிவள்தானோ) என்பதுபோல்.

இ-ம். எதுகுலகாம்போதி தா-ம். நுபகம்.

தங்களுக்குஎன்னவேண்டும் நகையீண்டுஞ் சொல்லவேண்டும் என்று
சாற்றினானந்தம்பூண்டு எத்
தலமுன்புகழ்தனைச்சொல்விட மிகவுங்கேட்டினி துன்னிடந்
தானேயின்றுவந்தேனென்றார் ஸ்ரீ
மானேயென்றே புகன்றார்
தங்கிவசிக்கின்றவூரைத்தங்கள் பேரை சொல்லுவீரோ என்று
சாற்றினரோ நாரதனை என்
றன்னகரோகுகையாகும் என்பெயரோ நாரதனென்
றெப்புவியிலு மேபுகழ்வார் மிக
தப்புக்கலகனென்றிகழ்வார்
என்னபுண்ணியஞ்செய்தேனோ தாங்கள்தானோ வராநானோ மிக
யேதமில் சுகம் பெற்றேனோ யின்று
என்னுபீஸ்வந்ததினால் வுன்பாதம் நொந்ததுவோ
என்னவேண்டு மென்றிசைத்தார் உயர்
பொன்னினைப் போன்ற குணத்தார்.

நாரதர்சொல்விருத்தம்.

நண்பனே ஜெர்மன் சில்வர் நகையினைப்
பண்புடன் கண்டனன் பாரதிலோதுவல்
தண்ணியநின் குணக்தனையு வந்தனன்
வண்மையாய்ச் செல்லுகின்றே னென்று வாழ்த்தினர்.

இங்கிலீஷ் நோட்டு.

சந்த மிகுஞ் ஜெர்மன் சில்வர் ஷாப்பைக் கண்டே
இந்தப் புதுமை நகைக்குடை மாதர்க ளிலகு மகாவை
குந்த மதிற் சென்றே வுரை செய்திட குணமாக
எந்தப் புவியும் புகழும் நாரத ரேகினர் மாதோ.

(மையலோங்கினேனடா) என்பதுபோல்.
இ-ம். இந்துஸ்தான் பைரவி நா-ம். சாப்பு.

பல்லவி.

சென்றனரே நாரதர்
திருவை குந்தம் தேவர்சபையில்

அநுபல்லவி.

நன்றிகெயுங்கண்ணுவுன்றன் நளினபாதமேவந்தனம்
துன்றுபுகழ்வேதனேவுன் தூயதாள்களேவந்தனம்.
ஆசனமளித்துயிங்கு அமருவீரென்றூர்களித்து
தேசமதிலென்னவதிசயம் தெரிந்துவந்தீர்சொல்வீரின்று.
நான்கண்டவதிசயம் நங்கைமாரறியவேணும் நீர்
தானறியச்சொல்லுறேன் தாரணியினற்புதத்தை.

வசனம்.

நாரதர் வைகுந்தஞ் சென்று ஸ்ரீகண்ணபிரானையுங் கஞ்சனையுங் கண்டு சென்னையிற்கண்டவதிசயத்தைச் செப்புகின்றூர்.

விருத்தம்.

காலையிற்றவத்தைவிட்டுக் காசினியெல்லாம்போந்து
கோலமார்சென்னைதன்னிற்குலவும் விந்தையையறிந்து
நீலமார்கண்ணுநிற்கும் நிமலவேதாதமக்கும்
பாலமர்மாதருக்கும் பகர்ந்திடவந்திட்டேனல்.

வசனம்.

நாரதர்கண்ட நகையின் சிறப்புப் பெயரையும் ஸ்பெஷல் ஜெர்மன்சில்வர் மெர்ச்சண்டு அண்டுநகை வியாபார அதிகாரியின் புகழையும் சொல்லுகின்றார்.

(நொண்டிச்சிந்து) வர்ன்னம்.

இ-ம். நாதநாமக்கிரிகை - ஆதி தாளம்.

கண்ணிகள்.

அற்புதமென்ன சொல்வேன் யான்கண்ட
யாவருமறியாரிப் பூவுலகில் (1)
வெள்ளியால் நகைபுரிய முந்தை
விபனுளறிந்தேன் இந்நாளில் (2)
சந்திரனைப்பழிக்கும் வொளி
தன்னைவீசும் வெள்ளைசெம்பதனுல் (3)
மன்னற்குராஜமுடி அணிய
மாசிலாததிருவயிரமுடி (4)
மன்னும்புனிதருக்குத் தெளிக்க
மாமேவும் பன்னீர்நிறைசொம்பும் (5)
மிக்கவாழைப்பூசொம்பும் திரு
மேவுங்கும்பகோணஸ்தாளிசொம்பும் (6)
சைனுஸ்தாளிசொம்பும் மிக
தகமையுறும்வைஷ்ணவ சொம்பும் (7)
மடிப்புடம்ளர்களும் திகழ்
மருவியசாதாடம்ளர்களும் (8)
பட்டைடம்ளர்களும் எட்டு
பளகில்மூக்குவைத்த டம்ளர்களும் (9)
பஞ்சபாத்திரமும் சாதா
பத்தவதார பஞ்சபாத்திரமும் (10)
கும்பகோணபஞ்சபாத்திரமும் புவிக்
குலவுமரடா பஞ்சபாத்திரமும் (11)
சந்தனகிண்ணங்களும் புகழ்
சாற்றரியபெலாகிண்ணங்களும் (12)

பொட்டுக்கிண்ணங்களும் மதி
புகலருஞ்சாதா கிண்ணங்களும் (13)

பூசினிக்காதட்டுகளும் இன்னும்
பேர்காரவேலைசெய்ததட்டுகளும் (14)

அஷ்டகோணதட்டுகளும் என்றும்
ஆசிலாபுறுதட்டுகளும் (15)

மாதரிடையிலணிய திற
மருவியசிலங்கை வொட்டியாணமும் (16)

கொக்கிவொட்டியாணமும் மாதர்
குலவுநகாசு வொட்டியாணமும் (17)

பாதத்தினுக்கணிய யிரு
பளபளப்புள்ள சுருள்கொலுசும் (18)

வேலங்காகொலுசும் புகழ்
விளங்குபுதுச்சேரி கொலுசுகளும் (19)

அருநெல்லிக்காய் கொலுசும் மிக
அந்தமிகுந்த பட்டைகொலுசும் (20)

மிட்டாய்பாடகமும் அதன்
மேலிருக்கும் பொத்துபாடகமும் (21)

புளாயில்காப்புகளும் உயர்
புகழுறுங்கோணகாப்புகளும் (22)

பாதசரந்தண்டை விண்ணவர்
பகரரியவொளிபூத்தண்டை (23)

வேந்தர்களுண்ணுகலம் பல
வேடிக்கையானபெலாயிலைகளும் (24)

மாமேவுவாழையிலையும் சுக
மகிமைத்திகழ் ஆலையிலைகளும் (25)

புகைரயில் கூஜாக்களும் சிவ
புண்ணியரணிவிபூதிமடல்களும் (26)

சாம்ராணிவத்திஸ்டாண்டும் இல்லில்
சமைத்ததமைக்க தூக்குசட்டிகளும் (27)

குங்குமபாணைகளும் தீய
கொடுமையுறுமைபாணைகளும் (28)

பாக்குதாள்டப்பிகளும் வேந்தர்
பகருமரடாப்பல்குத்திகளும் (29)

**

சாவிகொலுசுகளும் என்றுந்
தக்கஅணிமெட்டுதினுசுகளும் (30)

காலாழிபீலிகளும் மிகக்
கருதரியபலநகைகளும் (31)

இருக்கினந்தஷாப்பின் புகழை
என்னவென்றேயுரைப்பேன் கண்ணனே (32)

## நாரதர் அந்தஷாப்புக்கதிபர் புகழைபுகல்கின்றனர்.

(இராஜாதி ராஜனடி) என்பதுபோல்.

இம். இந்துஸ்தான் அடதாளம்.

ஜாவளி.

அந்தவெள்ளிபொன்னகைக்கு அதிகாரிநாமமையா
அந்தமிகும்சடகோப ஐயாவென்றுரைப்பார்மெய்யா
அன்பரே - என் - அவர்க்கிணையார் - நண்பரே. (1)

திருவேங்கடத்தானையன் செய்தவத்துதித்தபுத்ரன்
மருவோர்க்குமன்பர்க்கன்பன் மாசிலாதகுணத்தன்
அன்பரே - என் - அவர்க்கிணையார் - நண்பரே. (2)

கவிராஜர்க் குபகாரன் கருணைமிகுந் தீரன்
புவியிலழகினில் மாரன் புகழுநிதியிற்கு பேரன்
அன்பரே - என் - அவர்க்கிணையார் - நண்பரே. (3)

சொல்லதி லரிச்சந்திரன் சுகபோகமதி லிந்திரன்
வல்லவர்களுக்குத்தந்திரன் வர்ணிக்கவேலாதசுந்திரன்
அன்பரே - என் - அவர்க்கிணையார் - நண்பரே. (4)

புண்ணியம்பலபுரிவோன்புண்ணியர்தனைத் தொழுவோன்
திண்ணியநற் புயத்தோன் சீராருமில்லறத் தோன்
அன்பரே - என் - அவர்க்கிணையார் - நண்பரே. (5)

தோரு.

சடகோபஐயா சற்குணமதையும் ஷாப்பையுங்கண்டு மகிழ்ந்திடுவீர் திடமிகுங் கடவுளரே யென்றேமொழிந்தே நாரதர் சென்றனரே.

வசனம்.

நாரதமகாமுனிவர் ஸ்ரீகண்ணபிரானையுங் கஞ்சனையுங் கண்டு தான்கண்ட அற்புதத்தைவிண்டு தன திருப்பிடமேகினர். பின்பு இராதா ருக்மணிகளிருவரும் ஸ்ரீவைகுந்த நிகேதனுய் சகலாத்பபுவன கர்த்தாவாகியும் தனதுநாயகருமாகிய ஸ்ரீகண்ணபிரான்பாதாரவிந்தம் பணிந்து நாமும் அவ்வற்புதத்தைக் கண்ணுற்றுக் களிப்படையலா மென்று மொழிகின்றனர்.

## இராதா ருக்மணிகள் சொல்

சந்த விருத்தம்.

மன்னவர்வசிக்குஞ் சென்னை மன்தலத்தி லோங்கிடும்
மாசிலா குணத்தனும் மகத்வமுற்ற முத்தனும்
பன்னரியகீர்த்தி மேவும் பண்பின் மிக்க புண்யனும்
பாவையர்க்களிக்கு மாரனைப்பழிக்குமழகனும
துன்னு ஜர்மன்சில்வர் நகையுஞ் சுகமதாகக் காணவும்
தூயஷாப்பமைத்த சடகோப ஐயாவின்றன
நன்னயக் குணத்தையும் நவிற்று மற்புதத்தையும்
நாமுங்கண்டு வருவோமென்று நங்கைநாதர்க்கோதினர்.

இ-ம். இந்துஸ்தான் பைரவி அட தாளம்.
(சண்மணியே உந்தன்மீது) என்பது போல்.

பல்லவி.

பிராணநாதரே நாமும் அங்கு
பிரியமாகப் போகலாம் அந்த
பெருமைதன்னைக் காணலாம் (பி)

சரணங்கள்

இதுவரையிற் கண்டறியேன் யெவராலுஞ் சொல்லத்தெரியேன்
புதுமையாகக்காணுது - அங்கு போகமனந் தோணுது. (பி)

அற்புதகொலுசுகளும் - அணிதரும்பாடகங்களும்
இப்பொழுதேவாங்கவேணும் - யெங்கள்பாதந்தன்னில்பூணும். (பி)

சடகோபஐயாஷாப்பையுந் - தக்கவாபரணத்தையும்
திடமுடனவன்குணத்தையும் - தெரியலாமவ்விந்தையும். (பி)

வசனம்.

ஸ்ரீகண்ண்பிரான் இராதாருக்மணிகளை வரும்படி உத்தரவுகொடுத்தல்.

(தேடித்தேடிதிரிந்தேன்) என்பதுபோல்.

இ-ம். இந்துஸ்தான் ஆதி தாளம்.

பல்லவி.

சென்னைபுரிக்குச் செல்லுவோம்வாராய் சீக்கிரத்தில் நேராய்

அநுபல்லவி

கொன்னுறுமம்சட கோப ஐயாவின்
குணமதைக்காண சுக்கியான. (செ)

சரணங்கள்.

கருடவாகனமதில் கனிவுடனேறி
கன்னிபரோ செல்லலாம் பாரீர். (செ)
ஜெர்மன் சில்வர்நகை சீராகவாங்கவும்
ஜெகமதிலவன்புக ழோங்கவும் (செ)

வசனம்.

ஸ்ரீராதா ருக்மணிகள் கண்ணபிரானிடம் சென்னைக்குச்செல்லலாம் என்றியம்ப அதற்கு ஸ்ரீகண்ணபிரா னிசைந்து நாம் போகலாமென்றுரைத்தனர் சகலகலாவல்லியாகிய.

ஸ்ரீசரசுவதி நாயகனைக் கேட்கும் பாடல்.

(மாதவத்துடைய தபோதனரே) என்பதுபோல்.

இ-ம். சஹானு - ஆதிதாளம்,

கண்ணிகள்.

தாமரையினிலுறை சாஸ்வதிதேவியுந்
தன்கணவரைப்பணிந்தாள்
பூமிபுகழுஞ்சென்னை புரியினுளதிசயம்
போய்க்காண வேணுமென்றாள்.
என்றுசொல்ல நான்முகனுமகிழ்ந்தே
யிப்போதேகுவோமென்றார்
அன்னவாகனமேறியயனுஞ் சரஸ்வதி
அனைவருமே வந்தார்.

பொது.

இ-ம். இங்கிலீஷ் நோட்டு.

அன்பர்கள் புகழ் சருடன்மீ தமர்ந்தே கண்ண பிரான்
யின்புற் றிடு ராதாருக் மணியோ டுவெ ழுந்தார்.
சீரா ரயன் கலைவா ணியுந் திகழுன் னமீ தார்ந்தே
பாரார் புகழ் சென்னைப் புரி பரிவா கவே வாரார்.

வசனம்.

ஸ்ரீகண்ணபிரானும் கஞ்சனும் உலகத்துள்ள மனிதனைப்போல் திருவேடந்தரித்து சென்னைக்குவந்தனர்.

மூடுதே விருத்தம்.

சென்னையம்பதிக்கண்மிக்க திகழுமற்புதக்களைத்
தெரியவெண்ணிதுரிதமாக சென்னையின்கண்வந்தனர்
பொன்னுலாவுகந்தசுவாமி புண்யன் கோயில்நோக்கினர்
புனிதகந்தசாமிமருகன் புரமதிற்கு யேகினர்
பன்னிருகரத்தினலொண்பாலனும்பணிந்தனர்
பரிவதாகவந்தகண்ணன் பங்கயன் வணங்கினன்
உன்றனகரினுள்ள புதுமையோதுகென்றுரைத்தனர்
உலகமுண்ட கண்ணன்வேத னுவகை யோடுதானரோ.

வசனம்.

ஸ்ரீகண்ணபிரானுங் கஞ்சனுஞ் சென்னைகந்தசாமி ஆலயத்தில் வந்து கந்தசுவாமியைக்கண்டு ஸ்ரீமான் மம். சடகோப ஐயாவின் ஜர்மன் சில்வர் நகைஷாப்பின் புகழைசொல்லென்றிசைத்தனர்.

(கூடிமுன்னே கோழிகூவுதே) என்பது போல்.

இ-ம். இந்துஸ்தான் பியாது-ருபக தாளம்.

பல்லவி.

அற்புதத்தை என்ன சொல்லுவேன்
அடியனுமே.

அநுபல்லவி.

நற்புகழ் சேர் என்னகரில் நல்லதொரு புதுமையுண்டு
விற்பனமோ சொல்லுவேன் கேளும்
விரைவாக நானும்.

அன்புமிகுஞ் சடகோப ஐயாஷப்பொன்றுண்டு
யின்புடன் ஜர்மன் சில்வரால்
யியற்று நகையின். (அ)

சந்திரனைப் போலொளிருந் தக்கவரெல்லாம் புகழும்
சுந்தர நகையின் விந்தையை
சொற்றிடலாமோ. (அ)

வசனம்.

ஸ்ரீகண்ணனும் பிரமனும் கந்தசுவாமியிடம் வினவுதல்.

(அருமையாய் வீற்றிருக்கும்) என்பது போல்.

இ-ம். காம்போதி ஆதி தாளம்.

பல்லவி.

ஜெர்மன் சில்வர்ஷாப் பெங்கன மிருக்கிறதையா அதைத்
திறமுடனேவுரைசெய்திடுவாய் முரு கையா.

அநுபல்லவி.

நிர்மலமிகுசடகோபனெனும் பெயரானையா
நியமித்தஷாப்பென நிகழ்த்திடுவார் புவியின்மெய்யா. (ஜெ)

சரணம்.

எந்தன்ரதத்தினப்புறத்தில் மிக
வெழிலுறுவொருமந்திரத்தில் ஐயா
நன்னயஷாப்பு தன்னையமைத்தனர்
நலமுடனேயெவரு மொழிவர். (ஜெ)

நானுந்தங்களுடன்வாரேன் என்றன்
நங்கைமாரிருவோரோ நீர்
தானேயிங்குவசிப்பீரோ நான்
தனிமையாய் சென்றே வருகுவேனன்றே
தாமதஞ் செய்யாமலின்றே. (ஜெ)

வசனம்.

வள்ளி தெய்வானைத் தன்நாயகனாப்பணிந்துவிநாந்துகூறுதல்.

(மானென்றுந் தேனென்றும் பேசி) என்பதுபோல்.

இ-ம். சஹானு ஆதி தானம்.

பல்லவி.

நாதா நின்பாதஞ் சரணம் அதை
நாங்களுங் காணவித் தருணம்
நீதாவருகின் றேமிகவும் இப்போ
நீதயவுசெய்வாய் புகழும். (நா)

எங்களிருவரையும் விடுத்து தாங்கள்
யேகுதலழகல்ல தடுத்து.
மங்கைவரவுத்தரமளித்து மிக
வருதவிரொன்றுரை களித்து. (நா)

வள்ளிகுஞ் சரியெனு மாதே உங்கள்
மனதிஷ்டம் போல் வருவீரோ
புள்ளிமயில தின் மீதே சென்று
போகலா மகிழ்வாயிப் போதே (நா)

முடுகு விருத்தம்.

கவினுலாவுவள்ளி குஞ்சரிக்கனிந்து சொல்லவே
கந்தநாதனு ருணர்ந்துகந்து தோகை மீதிலே
தவமிகுந்த கந்தநாதர் தையலோ டெழுந்தனர்
தகையுலாவுங் கண்ணன்மாது சதுர்முக னெழுந்தனன்
குவலயத்து ளோர்புகழ்ந்து கூரவொன்றுகூடியே
குணமிகுந்த புண்ய சடகோபவையா ஷாப்பினை
எவருங்காணவற்புதத்தையின்ப மோடரதபுரம்
யெய்தினர்கள் மாதரோடிலகுஷாப்பில் சென்றனர்.

(சென்னிகுளநகர் வாசன்) என்பதுபோல்.

சிந்து.

கந்தசாமி யிருமாதும் மிக கண்ணபிரான்திருமாதும் மிக
கஞ்சன்பாதுங்கலை வாணியுந்துங் கவாகனத்தமர்ந்தே
வந்தார் அங்கு புகழ்ந்தார்

இவர்கள்வருவதைக்கண்டார்அங்கு ஏஜெண்டு ஆனந்தங்கொண்டார்
இசைபொற்றிடு மொழியைப்புகன் றசைவற்றிடு வாசனமதை
யீர்தார் கலை தேர்ந்தார்

அற்புதநகையீதென்றார் இதின் அழகைச்சொல்ல லாகாதென்றார்
அகிலம்புகழுங் கண்ணனுங் சந்தனுங் கஞ்சனுமேமிக
ஆர்ந்தார் களி கூர்ந்தார்.

வெண்மைமிறநகைபேனா அங்கு விளம்புகென்றாரோஜண்டோனா
மிகசந்திரனைப்போலொளிதனை வீசுது புவிமீதினில்
மானே என்சொல் வேனே.

வசனம்.

ஏஜெண்டு வந்த மூவர்கள் முகாரவிந்தம் நோக்கி ஜெர்மன் சில்வர் திருநாமத்தை சொல்கின்றனர்.

(கிட்ட கிட்ட மோதுதடி) என்பது போல்.

இ-ம். கியால் அடதாளம்.

கண்ணிகள்.

எங்கள் நகை போல் ஐயா யெங்கு மேநீர் காணிலறயா
துங்கவெள்ளி யென்றையா சொல்விடுவார்கள் மெய்யா
தங்கும் நகை பேயனாயா - யிங்கு சாற்றுகிறேன் கேளுமையா (எ)

இராஜர்முடி தானையா யெழில் வயிரமுடி யீதையா
பன்னீர் சொம்பு பாராயா - மகா பகருஞ் சைனு சொம்பு ஐயா.(எ)

வாழைப்பு சொம்பு ஐயா - யிது வையகத்தரிது ஐயா
வைஷ்ணவ சொம்பு ஐயா - மகா மதுரை நகர் சொம்பு ஐயா. (எ)

காவேரிச் சொம்பு ஐயா - திருக் காணரு மூக்குச் சொம்பு ஐயா
கும்பகோணச் சொம்பு ஐயா - மகா கூறுவதற் காகாதையா.(எ)

சந்தன கிண்ணம் ஐயா சார்ந்த பெலா கிண்ணம் ஐயா
அக்ஷதைக் கிண்ணம் ஐயா - மகா ஆசில் சாதாகிண்ணம் ஐயா. (எ)

பூசினிக்கா தட்டு ஐயா புகலு ரவுண் தட்டு ஐயா
அஷ்ட கோண தட்டு ஐயா - மகா அந்த புனு தட்டு ஐயா (எ)

கும்ப கோணபஞ்ச பாத்ரம் ஐயா குலவு பஞ்ச பாத்ரம் ஐயா
தசாவதார பாத்ரம் ஐயா - மகா சாற்றுதற் கரியதையா.(எ)

உருத்திராணி பாருமையா உலகு புகழ்ந் தேற்றும் ஐயா
இலகுராயில் கூஜா ஐயா - மகா என்னவென்று சொல்வேனையா. (எ)

சித்திர வொட்டியாணம் ஐயா சிலங்கை வொட்டியாணம் ஐயா
சாதா வொட்டியாணம் ஐயா - மகா தக்கதா யிருக்கும் ஐயா (எ)

புதுச்சேரி கொலுசு ஐயா புதுமையா யிருக்கும் ஐயா
அத்திக்கா கொலுசு ஐயா - மகா அந்த சுருள் கொலுசு ஐயா. (எ)

பாடகந் தண்டை ஐயா பார்க்கிற்கண் கூசுமையா
பாதசரந் தண்டை ஐயா - மகா பளகில் கோணகாப்பு ஐயா. (எ)

விபூதி மடல்தான் ஐயா விளங்குது பாரும் ஐயா
குங்கும பரணி ஐயா - மகா கொடியமை பரணி ஐயா. (எ)

அணிமெட்டிது தான் ஐயா அற்புதமாயிருக்கும் ஐயா
நல்ல குத்தவிளக்கும் ஐயா - மகா நாடும் அன்ன குத்தி ஐயா. (எ)

நாகசுரங்கள் ஐயா நவில்பூஜை பாத்ரம் ஐயா
திருமணி பொட்டி ஐயா - மகா திகழ் சாமரங்களையா. (எ)

இன்னம் பல நகைகள் யிருக்கின்ற துனைக்க ஐயா
காலமில்லையே ஐயா - இப்போ கருதினதை வாங்கும் ஐயா (எ)

## பொது விருத்தம்.

இந்தவிதம் நம்பெருமா னையாவென்னும்
ஏஜெண்டு தானியம்ப வின்பமாகக்
கந்தனுங்கண் ணன்கஞ்சன் களித்து கேட்டுக்
கண்மணியாம் மனைவியரே வுங்களுக்கு
எந்தநகை வேண்டுமென வந்தமாதர்
எல்லோரு மெல்லாம்வேண் டியதென் றூர்கள்
சிந்தைமகிழ்ந் தெழில்மூவர் மனைவிகட்குச்
செப்புகின்றூர் பின்வருநற் செய்திமாதோ.

## வசனம்.

ஸ்ரீகந்தனும் கண்ணனும் கஞ்சனும் அவரவர் மனைவி கட்குரைத்தல்.

***

(வீரட்டான மென்றும்) என்பதுபோல்:

இம். தனுசரி-ஏகதாளம்.

டோரா.

இந்த நகைகளெல்லாம் வாங்குவதற்
கேற்ற பொரு ளில்லையே
குந்தளமுறு மாதர்களே பவபொருள்
கொண்டுவர வில்லையே. (இ)

மெய்ஞ்ஞானப்பொருள் தன்னைக் கொடுத்திடில்
மேவுவனே வழியேன்
அஞ்ஞானப்பொரு ளுற்றவனே ஷாப்புக்
கதிபதியோ தெரியேன். (இ)

என்று மூவரவர் மனைவிகளுக்கு
யிதமுடனே பன்ன
இன்றுமுத லிவ்வற்புத நகைகண்
டிங்கிருக் கிறோ மென்ன. (இ)

இம்மொழிகேட்ட மூவர்களும் நாம்
என்ன செய்வோ மென்றே
செம்மையுறும்ஷாப்புக் கதிபதி குணம்
தெரிய வேண்டு மின்றே. (இ)

சடகோப ஐயா மெய்யன்பினையே
தான் தெரிந்த பின்னர்
திடமிகு ஞானப் பொருளினைத் தருவோ
மென்றே புகன் றனர். (இ)

மூவரு மேஜெண்டின் செங்கமல
முக மதனைப் பார்த்தார்
ஆவலுடன் ஷாப்புக் கதிபதியெங்கு
அகன் றனரோ வென்றார். (இ)

வசனம்.

மூவரும் ஏஜெண்டின் முகநோக்கி வினவுதல்.

(உன்னை விட வேறு துணை) என்பதுபோல்.

இ-ம். சங்கராபரணம் - ஆதிதாளம்.

இந்த ஜர்மன் சில்வர்ஷாப்புக் கிறையவனையா
அந்தமிகு ஆபீசிலமர்கின்றனர் மெய்யா.
ஆபீஸ் தன்னைக் காட்டவேணு மென்றே மூவரும்
நேசமுடன் சொல்லவே ஏஜெண்டு தானவரும்.

மூவரும் ஆபீசைக்காண்டல்.

இன்னிசை வெண்பா.

மூவர்களு மாதர் முகமலரா நோக்கியும
தாவலைப்போ லிங்கே யமருவீர்—நாந்தாம்
செய்யவா பீசில் திகழுஞ் சடகோப
ஐயாவைக் கண்டமர்வோ மால்.

வசனம்.

ஏஜெண்டு ஆபீசைக் காட்ட மூவர்கள் புகழ்கின்றனர்.

இ-ம். ஆனந்தபைரவி - ரூபக தாளம்.

பல்லவி.

அன்பனுபீசில் வந்தார் மூவர்களும
அகமதில் மிக மகிழ்ந்தார்.

அநுபல்லவி.

இன்புறுஞ் சடகோப ஐயா குணத்தைக் கண்டார்
இவரோ நமக்குத் தொண்டனென்றே யானந்தங் கொண்டார்.

சரணங்கள்.

ஆசனந்தனை யளித்தார் சடகோப
ஐயாவு மனங் களித்தார்
நேசமுடன்நகை கினைத்ததுயாதென்றார்
நிகரிலாத நகைதருகிறேன் நானென்றார். (அ)

தாங்கள் வசிப்பதெவ்விடம் தமியற்குத்
தயவு செய்துரையவ்விடம்
நாங்கள் வசிப்பது நடுமுனை சுழிகாடு
நானு மறிந்து கொண்டேன் நாயகா வெனையாளும். (அ)

வேண்டும் பொருளைக்கொடுத்தோம் வுமக்குமிக
விருப்புடனு சீர்வதித்தோம்
ஈண்டு புத்திரபாக்கியம் யினிமையுடனோங்கியே
என்றும் ஷாப்பும் ஆபீசெழிலுடன் வாழியே. (அ)

(இவ்விதந்தானிருக்க) என்பதுபோல்.

இ-ம். கியால் - ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆசிர்வதித்தாரே - மூவரும் அப்பால்வரோமென்றாரே.
ஆசில் சடகோப - ஐயா அகிலம் புகழ் பிரதாப
என்றனை விட்டுபோகா - திரு வெழிலுற மூவருந் தியாகா
உன்றன் திருவடி பணிவேன் - உமை உலகமெலாமிகப்புகழ்வேன்
கடவுளைப்போல் வந்தோரை - என் கருத்திற்கிசைந்திங்கிருப்பீரே
என்றேசடகோப - ஐயா இன்பமுடனே கூற
நன்றிதுவலவெண்ணி - மூவரும் நவில்கின்றனரே நண்ணி.

விருத்தம்.

இங்குனதுகுணமதையுமெழில்ஷாப்புப்பணிகளையுமினிதுகண்டோந்
தங்குபுகழெமதுமனைவியருமது ஷாப்பினில்வந்தனர் நகைகளை
பங்கமுடன்வாங்கிதரபோந்தனமதற்குமிகபுகழார்ந்திடுஞ் [ர்.
செங்கையிற்பொருள்குறைவதாலிப்போதுதவிதனை செய்வாயென்று

(இந்திரனுன்னை வரச்சொன்னார்) என்பதுபோல்.

இ-ம். இந்துஸ்தான்-ஆதிதாளம்.

பல்லவி.

இப்போதுதவி செய் மெய்யா இன்பசடகோப வையா.

அநுபல்லவி.

எப்போதும் உனைமறவோம் யெங்குமுனையேபுகழ்வோம்
முப்போதும் உனைவிட்டகலோம் மும்மூர்த்திகளுமகிழ்வோம். (இ)

ஸ்ரீமான் மம். சடகோப ஐயா வினவுதல்.

எந்த நகை வேண்டுமையா எனைநாடி வந்த துய்யா
அந்த நகைபெயர் மெய்யா அருள்செய் தருகிறேன் கையால். (எ)

மங்கையர்கள் ஷாப்பினிலே வந்திருக்கின்றாரிக்காலே
அங்கஷாப்பில் செல்லுவோம்வாராய் சுந்தரமிகுங் கெம்பிரா. (எ)

வசனம்.

வந்தமூவர்களும் சிந்தைமகிழ்ந்து ஷாப்புக்கதிபரிடம்சொல்லல்.

கலி விருத்தம்.

உனது ஷாப்பினி லெங்களுத் தமியர்
மனது வந்தமர் கின்றனர் வண்மையாய்
எனவே மூவர்க ளின்பா யிசைத்திடக்
கனத னச்சட கோபன் களித்தனன்.

வசனம்.

இந்தவிதமாக மூவர்களும் மம். சடகோப ஐயாவைக்கண்டு சிந்தை மகிழ்வுகொண்டு நாங்கள் நடு நாட்டில் உனது ஜெர்மன் சில்வர் நகையின் பெருமையையும் உனது புகழையுங் கேள்வியுற்று எமது மனைவியரோடு உனது ஷாப்பிலுள்ள நகைகளைவாங்க வந்தனம். கையிற் கொண்டு வந்த பொருள் குறைவதால் உதவி செய்ய வேண்டுமென்றிசைக்க, அதற்கதிப ரிசைந்து தாங்கள் கேட்கும் நகையைக் கொடுக்கிறேன்; நான் கேட்கும்வரத்தைக் கொடுக்கவேண்டுமென்றியம்ப, அப்படியே கொடுக்கிறோமென்று வந்த மூவர்களுங் கூற ஆபீசைவிட்டு மூவருடன் ஷாப்பில் வந்தனர்.

வசனம்.

அதிபர் ஷாப்பிற்குவந்து மங்கையரைவரைக் கண்டு வணங்குதல்.

(மையலாகினேன்) என்பது போல்.

இ-ம். இந்துஸ்தான் கமாசு-தா-ம். ரூபகம்.

---

பல்லவி.

அன்னையைக் கண்டார் - ஐந்து
அன்பாய் சடகோப ஐயா ஆனந்தங் கொண்டார்.

அநுபல்லவி.

மன்னு வர்தாள்பணிந்தார் மகிமை என்ன சொல்வே னென்றார்
என்னவேண்டிவண் நகை
யிப்போதே தருகிறேன் யான் வியப்புவி ரின்றே.

சரணம்.

ள்கொலுசு வேண்டும் - அன்பா - சுகமுட னீந்திடும் நண்பா
அருள் தருகிறோம் - யிப்போ - அகிலமெல்லாம் புகழவின்று
பெருள் தருகிறோம்.

வேண்டு நகை - தந்தேனின்றே - விரும்பியதைப - போலன்றே
யீண்டெடற்கு வரந்தனை - யீந்திடுவீர் மகிழ்ந்தித் தினம்
காண்டருங் கனம்.

விருத்தம்.

கண்ணபிரான் மனைவிகள் ராதாருக்மணிக்குநகைக் கனிவொடீந்து
வண்ணமிகு கந்தசாமியின் மனைவி குஞ்சரியும் வள்ளிக்கேற்ற
பண்ணரிய நகைதந்து வுயர் பிரமன் மாது கலை பதிதனக்கும்
விண்ணவர்கள்சொலவரியஜர்மனகைதந்திட்டார் விருப்பின் மாதோ.

(இராஜன்வரக்காணேன்) என்பதுபோல்.

இ-ம். இந்துஸ்தான் - கமாசு - ஆதி தாளம்.

பல்லவி.

நான்கேட்கும் வரந்தனை நலமாய்த்தருகுவீரே
நலமாய்த் தருகுவீரே பலகலையுணர்ந்தோரே (நா)

அநுபல்லவி.

வானவர் தொழும் நாதரே மாசிலா விநோதரே
யேனமிலென்ஷாப்பினிலே யென்றும் வாழ்ந்திடுகுவீரே. (நா)

சரணம்.

தினமும்மையே போற்றுவேன் திருப்பணியுஞ் செய்குவேன்
கனமிகும் புண்யரே கருணைமிகுந்திண்யரே. (நா)

மூவர்கள் அதிபர் முகநோக்கி விளம்புகின்றனர்.

தூயநாட்டில் வாழ்பவர்க்கு தொல்லை நகராகாதன்பா
நேயமுடன் வேண்டிவரம் நிகழ்த்துதருவோ மித்தினம். (நா)

அதிபர் சொல்லுதல்.

அஷ்ட ஐஸ்வரிய முண்டாக ஆயுள் மிகப்பெருக
இஷ்டனுக் கருளையா யியம்பினேனுயர் மெய்யா. (நா)

நினைத்தபோ தருட்பார்வையும் நெடியசம்பத்துறவும்
மனமகிழ்ந் தருளின்றே மாசிலா வரத்தை நன்றே. (நா)

வசனம்.

ஸ்ரீமான் மம். சடகோபஐயா அவர்கள் தாங்கள் எல்லோரும் என்ஷாப்பில் இருக்கவேண்டுமென்றிசைக்க அதற்குமூவர்களும்இவர் உத்தம-சீலரென்று சித்தத்திலுன்னி கூறுகின்றனர்.

இ-ம். தோடி-தா-ம்-ஆதி.

(நீ காக்க வேண்டு முருகா) என்பதுபோல்.

பல்லவி.

நினதன்பினுக்கு வந்தனம் சடகோப ஐயா
நிகழ்த்துவதைக்கேளித் தினம்.

அநுபல்லவி.

கனமிகும் அஷ்டலட்சுமிகளையும் வரவழைத்து
கண்ணியநின் ஷாப்பினில் நண்ணியுறவமைத்து
காலமென்றும் வாழ்ந்திடவே செய்கிறோம்
காதலுடன் வந்தருள்தனை புரிகிறோம். (நி)

சீலனே உனதுபுகழெங்கும்புகல்கிறோம்
திறமுடனே யுனைசெய் வரவழைக்கிறோம் (நி)

அகவல் இ-ம்-சங்கராபரணம்.

அன்பனே கேளாய் அஷ்ட லட்சுமியை
யின்புட னழைத்து யென்றுமுன் ஷாப்பில்
தங்கிவாழ்ந் திடவே தண்ணருள் செய்து
எங்கடன் பதிக்கு யேகுவோ மெனவே
சடகோப ஐயா சந்தோஷ மாக
திடமாக அஷ்ட சீர்லட் சுமியை
வரவழைத் திங்கு வாழ்ந்திடச் செய்து
பரிவுடன் பொருளைப் பாவித்து மிக்க
திறமையாய் வந்தனம் செய்கின்ற போது
விரைவுடன் வந்து வியந்தருள் புரிவீர்
என்று மொழிந்து இன்றுநின் பதிக்கு
சென்றுவா வென்றே செப்பினா ரன்றே.

வசனம்.

ஸ்ரீவைகுந்தத்திற் கதிபதியாகிய கண்ணனும் ஸ்ரீசத்திய லோகத்திற் கதிபதியாகிய பிரமனும், சென்னைக் கதிபதியாகிய கந்தசுவாமி

யும் ஜர்மன்சில்வர் ஷாப்புக் கதிபதியாகிய ஸ்ரீமான். மம். சடகோப ஐயா இப்போது ஷாப்பினில் அஷ்ட ஐஸ்வரிய முண்டாக அருள் செய்கிறோமென அம்மொழிக் கதிபரிணங்க அஷ்டலட்சுமியை வா வழைக் கின்றனர்.

(மார்கழி மாதந் திருவாதிரைநாள்) என்பதுபோல்.
இ-ம். எதுநலகாம்போதி தா-ம். ஆதி.

கண்ணிகள்.

தனலட்சுமி தானிபலட்சுமியுந் தயிரிய லட்சுமியுங்
கனமிகுவீர லட்சுமிஜெயலட்சுமி காணன்ன லட்சுமியும்
ஆதிலட்சுமி கஜலட்சுமியெனு அஷ்டலட்சுமியை யழைத்து
நீதிபாகவென்றன் நேயன்ஷாப்பினில் நீங்கள்வாழ்குவீரென்றமைத்து
சென்றுவரோமுன் மனைவிமக்களுடன் சிரரக வாழ்குவீரென்றே
அன்றுஆசீர்வதித்தே நின்றனரால் அவர்புகழ்சொல்வாரன்றே.

வசனம்.

ஸ்ரீகண்ணபிரானுங் கந்தசுவாமியும் பிரமனும் ஸ்ரீமான். மம். சடகோப ஐயா ஷாப்பினில் அஷ்ட ஐஸ்வரிய முண்டாகும்படி அநுக்கிரகித்து தந்தம் மனைவியருடன் தமது பதிக்குச் சென்றனர். சுபம். சுபம். சுபம்.

விருத்தம்.

இந்தவிதமாக மூவருமகிழ்ந்து
யின்பமிகுஞ்சடகோப ஐயாவிற்குஞ்
சந்தமிகும் அஷ்டவைஸ்வரிய மோங்க
தக்கபுத்திர பாக்யமிக்குமே
சுந்தரஞ்சேர் நம்பெருமாளையாவிற்குஞ்
சுகமன்றல்வல்லியே துலங்கிவாழ்கச்
சிந்தைமகிழ்ந்தருள்செய்து மூன்றுநாதர்
சீர்மனைவியர்களுடனே சென்றார்மாதோ.

## ஆபீசிலுள்ள அனைவர்மீதும் வாழ்த்துதல்.

(வாராளிதோ சுயம்புவல்லி) என்பதுபோல்.
இ-ம். இந்துஸ்தான் தா-ம்-நுபகம்.

கண்ணிகள்.

கண்ணனுங் கந்தனுங் கஞ்சன் கலந்து வாழ்கவே
வண்ணமிகு மொழிசொலேந்து மங்கை வாழ்கவே

மாநகர் புமழும் புண்யவள்ள லென்றிடும்
ஓர்மம், சடகோப ஐயா வோங்கி வாழ்கவே
தேசம்புகழ் கண்ணன் பாசந் தினந் துதித்திடும்
ஆசில் ஏஜண்டு நம்பெருமாளையா வாழ்கவே
திட்டமிகு முத்தமிழில் தேர்ந்த செல்வ ராமுயர்
எட் ரயிட்டர் ஆளவந்தா ரையா வாழ்கவே
தழைத்தயிங்கிலீழ் தெலுங்கு தமிழை சகலமுங் கற்ற
பிழையில் ரயிட்டர் பசுபதிப்பிள்ளையும் வாழ்கவே
திடமிகு பொருள் கரமதென்றுந் திகழ வோங்கிடும்
கெடவுன் கீப்பர் செங்கல்வராய செட்டியார் வாழ்கவே
அசிஸ்ட்டண்டு கெடவுன் கீப்ப ராயி லங்கிடும்
இசையு மிகும் வெங்கட்ராமஐப ரினிது வாழ்கவே
எங்கிரோவல் சிங்காரராய முதலி வாழ்கவே
புங்கமிகு மற்றுமுள்ள புனிதர் வாழ்கவே
வெயின் கிளர்க்கு சோமசுந்தரப் பிள்ளை வாழ்கவே
ஆடிக்கல் சூப்பர் வைஜர்கந்த சாமியும் வாழ்கவே
ஆபீஸ டண்டர் துரைசாமி முதலி வாழ்கவே
ஆபீஸ டண்டர் நாராயண சாமியும் வாழ்கவே
சப்ப டண்டர் குப்புசாமி சதா வாழ்கவே
சப்ப டண்டர் துரைசாமிப் பிள்ளையும் வாழ்கவே
பங்காபி யோன் ராஜரத்தினம் பாங்காய் வாழ்கவே
துங்க ஆபீஸ் கேட்பியோன்ரூ மையா வாழ்கவே (௧)

## ஷாப்பினுள்ள அனைவர்மீது வாழ்த்துதல்.

இ - ம். இந்துஸ்தான் தாளம் - ரூபகம்.

காசினியெல் லாம்புகழுங் கண்ய ஞந்திரு
ஏஜெண்டு சாம்பசிவப் பிள்ளை யென்று வாழ்கவே
சொல்லருஞ்சீர் ராமன்ரூளை தொழு திறைஞ்சிடும்
செல்லின் கிளர்க் கரிராமபிள்ளை சீராய் வாழ்கவே
திண்புவிப் புகழு மீசன் திருவடித் தொழும்
தண்பஞ்சிங் கார ஐயர் நாளும் வாழ்கவே

****

| | |
|---|---|
| அடெண்டர் ராம சாமிபிள்ளை அன்பாய் | வாழ்கவே |
| அடெண்டர் ராஜ கோபாலு ராஜாவும் | வாழ்கவே |
| அடெண்டர் ராசு முதலியா ரவனியில் | வாழ்கவே |
| அடெண்டர் முருகேசு முதலி யாரும் | வாழ்கவே |
| ஷாப்பு கேட்பியோன் நன்னுமியான் சாயப்பு | வாழ்கவே |
| மாப்புவிப் புகழும் ஷாப்பு மன்னி | வாழ்கவே |
| படித்தவருங் கேட்ட பேரும் பண்பாய் | வாழ்கவே |
| படியை யாளுமன்னர் புலவர் பாங்காய் | வாழ்கவே |
| ஜெர்மன்சில்வர் நகையைச் செய்யும் செல்வர் | வாழ்கவே |
| நன்மைபுரி சடகோப ஐயா நாளும் | வாழ்கவே |
| மனைவிமைந்த ருறவி னோருமகிழ்ந்து | வாழ்கவே |
| கனமிகுந் தமிய ருறவர் கலந்து | வாழ்கவே |
| புதுமையாக யிக்கதையைச் செய்த புனிதன் | வாழ்கவே |
| புதுவைநட ராஜன் கவி புகழாய் | வாழ்கவே. (க) |

## மங்களம்.

இ-ம். நாதநாமக்கிரியை - தா - ம் - ரூபகம்.

பல்லவி.

| | | |
|---|---|---|
| ஓங்கணபதி வுயர் | தாட்டு | மங்களம் |
| பாங்கமரும் வல்லபை | தாய்க்கு | மங்களம் |
| வள்ளிகுஞ்சரி மகிழ்சுப்ர | மண்யா | மங்களம் |
| புள்ளிமயின் மேல்வரும் | புண்யா | மங்களம் |
| கருணைசெய்திடு மலர்க் | கண்ணா | மங்களம் |
| மருவளர் புயமுகில் | வண்ணா | மங்களம் |
| ராதாருக்மணி மகிழ் | நாதா | மங்களம் |
| பாதாம் புயந்தந்திடும் | விநோதா | மங்களம் |
| சுத்த சைதன்யசுடர் | பதியே | மங்களம் |
| நித்தியானந்த சுக | நிதியே | மங்களம் |
| சடகோப ஐயாவைக் கா | தருவே | மங்களம் |
| திடமிகும் பொருள்தருந் | திருவே | மங்களம் |
| நடராஜன் துதிக்கருள் | நவமே | மங்களம் |
| தடமிகுந் தில்லைவளர் | தவமே | மங்களம் |

முற்றுப் பெற்றது.

சுபம். சுபம். சுபம்.

## அற்புதநகையின் அலங்கார விளம்பரமாலை.

(பூரணசந்திர னுதயமானது) என்பதுபோல்.

இ-ம். நாதநாமக்கிரியை-தா-ம்-ஜதி.

லாவணி.

திருவளர் காசிநகர் தனில் வாழுந்
திவ்ய குணகா னுயர் குலத்தன்
மருவளருந் தன் மனைவி மைந்தருடன்
மாசிலா நடத்துமில் லறத்தன். 1

தருமத்தை யென்றும் புரியுங் குணத்தன்
தக்க நிதியினில் அள கேசன்
கருமத்தை நீக்கிட கண்ணபிரான்றன்
கழலிணை யநுதினம் பணி நேசன். 2

அன்னவன் முத்து மாணிக்க மென்றே
அறைந்திடுவார் புவியினி லன்றே
பன்னருங்காசிப் பதியதனில் மிக்க
பாக்கியனுப் வாழ்குவ னின்றே. 3

காசியை விடுத்து சென்னைக்கு வந்த
கண்ணிய னொருவன் திண்ண முடன்
தேசம்புகழ் சடகோப ஐயா ஜர்மன்
சில்வர் ஷாப்பதனைக் கண் டனன். 4

கண்டானந்தங் கொண்டு வற்புத நகை
கனிவுடன் வாங்கிட வேண்டு மென
கண்டார் மொழி மனைவியினோ டழகாய்
கவின் ஜெர்மன்ஷாப்பில் வந்த னனே. 5

வேண்டிய வெண்பொன் நகைதனை வாங்கி
விருப்புடன் வசிக்குங் காசிப் பதியில்
காண்டகு நகையைக் காட்டவேண்டு மென்று
காசிக்குச் சென்று னத் ததியில் 6

விருத்தம்.

காசிக்குச் சென்ருன் மகாதனத்தைக் கொண்ட
கண்யமுத்து மாணிக்கந் தன்னைக் கண்டே
நேசமுடன் ஜெர்மன் சில்வரினுற் செய்த
நிகரில் நகைதனைக் காட்ட நிதியுற் ருேனும்
ஆசைகொண்டு அந்தநகை வாங்க வேண்டி
அணிகொண்ட மனைவியுமே யுரைக்க வப்போ
தேசமெலாம் புகழ்சென்னைப் பதிக்கு வந்தே
தேடினர் ஷாப்பதனை நாடினரே.

(சித்தம்வைத் தாளுமையா) என்பதுபோல்.
இ-ம். பைரவி-தா-ம்-நுபகம்.

பல்லவி.

சென்னைக்கு வந் தனரே யிருவோருஞ்
சிந்தை மகிழ்ந் தனரே.

அநுபல்லவி.

நன்னய ஜெர்மன்சில்வர் நகைஷாப்பினை
நாடினரே யெங்குந் தேடினரே யன்று (செ)

சரணங்கள்.

சென்னையினுள்ளவரே ஜெர்மனகை
சிறப்பெது சொல்வீரோ
என்னகரோ காசிப் பதியதாகும்
யின்புடன் சொன்னே னன்புள்ளோரே நீரும் (செ)

வழிபோக்கர் சொல்லல்.

இந்த சென்னை தனிலே வெண்பொனகை
யிருக்கின்றது பலவே
அந்தமிகுஞ் சடகோப ஐயா ஷாப்பில்
அற்புதமா யிருக்கும் விற்பனரே. (இ)

காரண்டி தான் கொடுப்பார் மிகவுங்
கண்ணியர்கள் தானடுப் பார்
சீருறுமவர் ஷாப்பில் நகைவாங்குஞ்
செம்மையா யிருக்கும் யிம்மகி தலத்தில் (இ)

கலி விருத்தம்.

எங்கு ஷாப்பினைக் கண்டிடு வோமென
தங்கும் பற்பல ஷாப்பில் நுழைந்தனர்
பங்கிமேவு நகை தன்னைப் பார்த்தனர்
யிங்கிது வுதவா தென் றெழுந்தனர்.

நேரிசை வெண்பா.

என்றுஜர் மன்சில்வர் யின்பநகை ஷாப்புப்பல
சென்றுநன்று யில்லையெனச் சிந்தை யுணர்ந்தன்றே
அருளார் சடகோப ஐயாஷாப் பிற்கு
யிரு வோரும் வந்தா ரிசைந்து.

விருத்தம்.

முத்து மாணிக்கமெனும் மூதறிவோனுந் திரிந்து
பத்து ஷாப்பில்நுழைந்து பயனில்லை யீதல்லோ
வுத்தமஷாப் பென்றுமிக வுள்ளமதிலே வுன்னி
சுத்த ஜெர்மன்சில்வர் சுகநாமஞ் சொல்லென்றார்.

(கிட்ட கிட்ட மோதுதடி) என்பதுபோல்.

இ ம். கியால்-தாளம்-ஏக்.

கண்ணிகள்.

ஜெர்மன் சில்வர் நகைகள் தெருவினில் விற்கு மையா
மர்மந் தெரியா தையா அதை வாங்கிடு வார்கள் மெய்யா
தன்மை கேட்டிடு மையா யதன் ஷாப்பினில் வந்ததா லையா (ஜெ)
சந்த * வெண் பொன் றனக்குத் தக்க பொருளளித்து
இந்த ஷாப்பில் நகைகள் பல யியற்றுகின்றோ நாங்களையா (ஜெ)
வெள்ளை செம்பதில் மூன்று விதமுண் டதைத் தெரிந்து
வுள்ளபடி சொல்கிறேனையா அதின் யுண்மை தனையின்றே ஐயா (ஜெ)
சீமை வெள்ளை செம்பு ஐயா சீரா யிருக்கா தையா
தீமை செய்திடு மையா மஞ்சள் நிசமூ நிறமாகும் ஐயா (ஜெ)
புனா வெள்ளை செம்பை ஐயா பொம்பாயி விருந்து ஐயா
வந்த மார்வாடிகளையா யதை வைத்துக் கொண்டு விற்கிறாரையா ()

* வெள்ளை செப்பு.

மட்ட தினுசு வையா கெட்டு போகுந் தான் மெய்யா
நஷ்டம் வாங்கினு லையா மிக நல்ல நகை பாரு மையா (ஜெ)

ஜர்மனி யிருக்கு மையா தக்க வெள்ளை செம்பை ஐயா
மிக்கத் துடுக்க னாயா அதை விற்பனை செய்கின்றார் மெய்யா (ஜெ)

ஆஸ்ரி யாவி யிருக்கும் மிக அந்த வெள்ளை செம்பு ஐயா
சேர்த்தியாக யிருக்கும் ஐயா நிகழ் வெள்ளி போலொளிரும் (ஜெ)

ஆஸ்ரியா வெண் பொன்னினை அளவில் பொன்னைக் கொடுத்துனை
வழைத்து நகை செய்கிறோம் மாசில் காரண்டிங் கொடுக்கிறோம் ()

எங்கள் நகை வாங்குவதற் கேற்ற மொழி சொன்னேனே
சிந்தையில் நினைக்க வேண்டாம் நீர் தீயதென்றுந் தள்ள வேண்டாம்
[ம் (ஜெ)

ஒரு நகர்க்கு மூன்று விதம் யுள்ளது வெண் பொன்னு ஐயா
மருவளர் பெஷல்தா னையா மகா மாசில் குவாலடி ஐயா (ஜெ)

அதில் மட்டந் தானே வையா அந்த பெஷ்ட் பெஸ்ட்கு
அதில் தாழ்ந்தது தானைபா மிக அவல பெஸ்ட்கு குவாலடி ஐயா ()

இந்த விதம் ஒன்பது யிருக்குதா பேதமையா
அந்தவித மறிந்து முன் ஆஸ்ரியா செம்பு நல்லதையா ()

மதுரகவி நடராஜன் செய் மாகவியைப் பாருமையா
புதுமையா யிருக்குமையா யிது புவிபெலாம் விளங்குமையா ()

## விருத்தம்.

இப்படியே யிருக்குமென வெள்ளைசெம்பின் குணத்தை
யியம்ப யேஜெண்
டப்படியே யிருக்குமென வந்தவிருவோ ரெண்ணி
அடியேன் காசி
எப்பொழுதுமே வாழ்வேனங்குமது ஷாப்பினகை
யினிது கண்டே
இப்பொழுது வந்தேனென்றே மொழிந்து நகைவாங்கி
யெய்தினரே.

முற்றுப் பெற்றது.

சுபம். சுபம். சுபம்.

O.2:57